செ.வெ.எண்: 21/2021 நாள்: 19.03.2021

**பத்திரிக்கைச்செய்தி**

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் (18.03.2021) அன்று வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ யொட்டி ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பணிகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தேர்தல் பார்வையாளர்கள் (பொது) டாக்டர்.ராஜீ நாராயண சுவாமி இ.ஆ.ப., அவர்கள், திரு. பிரகாஷ் பிந்து இ.ஆ.ப., அவர்கள் மற்றும் டாக்டர் வேத பதி மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர்களின் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021 நடைபெறுவதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்திற்கு உட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் ஆணையத்தால் மூன்று தேர்தல் பொதுப்பார்வையாளர்கள் தேர்தல் பணிகளை கண்காணிக்க (18.03.2021) அன்று தென்காசி மாவட்டத்திற்கு வருகைபுரிந்துள்ளனர். 219-சங்கரன்கோவில் (தனி), 220-வாசுதேவநல்லூர் (தனி) சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பொறுப்பாளர்களாக டாக்டர். ராஜீ நாராயண சுவாமி இ.ஆ.ப., அவர்களது கைப்பேசி எண் (80155 77002), 221-கடையநல்லூர், 222-தென்காசி சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பொறுப்பாளராக திரு. பிரகாஷ் பிந்து இ.ஆ.ப., அவர்களது கைப்பேசி எண்(80155 77004), 223-ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் பொறுப்பாளராக டாக்டர் வேத பதி மிஸ்ரா இ.ஆ.ப., அவர்களது கைப்பேசி எண் (80155 77006) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் மற்றும் அரசியல் கட்சியினர் தேர்தல் தொடர்பான புகார்களை அலுவலக நேரங்களில் சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொறுப்பாளர்களிடம் சங்கரன்கோவில் நெடுஞ்சாலைத்துறை பயணியர் விடுதியிலும், தென்காசி மற்றும் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொறுப்பாளர்களிடம் தென்காசி பொதுப்பணித்துறை (நிர்வள ஆதார அமைப்பு) ஆய்வு மாளிகைகளிலும், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிகளுக்கான தேர்தல் பொறுப்பாளர்களிடம் ஆலங்குளம் நெடுஞ்சாலைத்துறை பயணியர் விடுதியிலும் நேரில் சந்தித்து தெரிவிக்கலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வருகின்ற சட்டமன்ற பொதுத்தேர்தல் 2021-ஐ யொட்டி 100 சதவீகிதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன் இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தேர்தல் பார்வையாளர்கள் (பொது) டாக்டர்.ராஜீ நாராயணசுவாமி,இ.ஆ.ப., திரு.பிரகாஷ்பிந்து,இ.ஆ.ப., .டாக்டர்.வேத பதி மிஸ்ரா.இ.ஆ.ப., ஆகியோர் துவக்கி வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சுகுணாசிங் இ.கா.ப., அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ஜனனி சௌந்தர்யா, தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**